**நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது)**
**அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.ம.சதிஸ் குமார், பி.இ.,**

**ந.க.அ3.எண்.2473/2023, நாள்: 17.06.2025.**

பொருள் : **பொதுப்பணிகள்** – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தொகுதி – IV தேர்வுகள் – 24.07.2022 அன்று தேர்வு நடைபெற்றது – இளநிலை வருவாய் அய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு நீலகிரி மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணிநியமனம் வழங்கப்பட்டது – பணியில் இணைந்தது – தமிழ் வழி கல்வி பயின்றதற்கு வழங்கப்பட்ட (PSTM) சான்றிதழக்கான மெய்த்தன்மை பெறப்பட்டது – பணிவரன்முறை செய்து –உத்தரவு

படிக்கப் பட்டவை :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், டி.என்.பி.எஸ்.சி சாலை, சென்னை – 600 003 அவர்களின் கடிதம் எண். 1827/PSD–D1/2023, நாள்:23.08.2023.
2. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண். ந.க.2473/2023/A3, நாள்:27.09.2023.
3. உதவி ஆணையர் (ஆயம்), நீலகிரி மாவட்டம் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3.எண்.2473/2023, நாள் :21.08.2024.
4. இவ்வலுவலக கடிதம் ந.க.2473/2023/A3, நாள்:06.08.2024. (இயக்குநர், பள்ளி கல்வித்துறை அவர்களுக்கு முகவரியிட்டது)
5. ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கடிதம் ஓ.மு.எண்.3020/அ5/2024,நாள் :25.07.2024
6. திண்டுக்கல் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.3125/ஆ5/2024, நாள் :28.08.2024.
7. இவ்வலுவலக கடிதம் ந.க.2473/2023/A3, நாள்:02.09.2024, 4.11.2024, 06.12,2024 மற்றும் 19.02.2025 (சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு முகவரியிட்டது)
8. சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.2948/அ4/2024, நாள் :22.03.2025
9. புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கடிதம் மூ.மு.எண்.3603/ஆ4/2024, நாள்:13.05.2025

–––––––

உத்தரவு.

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடத்தப்பட்ட தொகுதி – IV தேர்வில் தேர்ச்சி பெற்று, நீலகிரி மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை வருவாய் அய்வாளர்களின் விபரம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டதைத் தொடர்ந்து, மேலே இரண்டில் படிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண் ந.க.2473/2023/A3, நாள்:27.09.2023–இன்படி, மேற்காணும் இளநிலை வருவாய் அய்வாளர்களுக்கு நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் அலுவலகம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆணை வழங்கப்பட்டது.

இந்நேர்வில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பின்வரும் 03 இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு பின்வருமாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் (ம) பணிபுரியும் அலுவலகம் | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1) | செ.அல்போன்ஸ் மெர்வின், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலகம், உதகமண்டலம் | 09.10.2023 முற்பகல் | 09.10.2023 முற்பகல் |
| 2) | சு.சுஸ்மிதா, வட்டாட்சியர் அலுவலகம், குன்னூர் | 09.10.2023 முற்பகல் | 09.10.2023 முற்பகல் |
| 3) | ர.விக்னேஷ், வட்டாட்சியர் அலுவலகம், உதகமண்டலம் | 09.10.2023 முற்பகல் | 09.10.2023 முற்பகல் |

மேற்காணும் இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் தகுதிகாண் பருவ காலமானது பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் துவங்கப்பட்டதாக உத்தரவிடப்படுகிறது.

மேற்படி தனியர்கள் தங்களது மூன்றாண்டுகளுக்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய தகுதியான அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும், அவ்வாறு நிருவாக காரணம் இன்றி தனியரின் சொந்த காரணங்களினால், மேற்காணும் காலத்திற்குள் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்யாத நேர்வில், TAMIL NADU GOVERNMENT SERVANTS (CONDITIONS OF SERVICE) ACT, 2016-இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி, தனியர்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்காணும் தனியர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்/-ம.சதிஸ் குமார்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியர் (பொது)
நீலகிரி மாவட்டம்

பெறுநர்
தொடர்புடைய இளநிலை வருவாய் ஆய்வாளர்கள்.

**நகல்**

1. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலகம், உதகமண்டலம்,.
2. வட்டாட்சியர், உதகமண்டலம் / குன்னூர்.
3. அ-3 இருப்பு கோப்பு.

//உ.ந.உ.ப//

17/6/25

தலைமைப் பொறுப்பாளர் (பொது)

17/6/25